DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.279/2023 |
| Deposition of Witness for | : | P.W. 8 |
| Name | : | **வெற்றிவேல்** |
| Father's Name | : | **பழனிச்சாமி** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 2வது எதிரி ஆஜர். 1-ம் எதிரி பி.டி வாரண்டில் காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 09.03.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சிங்கம்புணரியில் குடியிருந்து வருகிறேன். நான் டிராக்டர் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். சாட்சி குமார் எனது அண்ணன் முறையாவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு சிங்கம்புணரி காவல்நிலையத்திற்கு எனது வண்டியை எடுக்க செல்லும்போது போலிசார் எனது கையொப்பங்களை பெற்றுக்கொண்டனர். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள வெற்றிவேல் என்ற 1வது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2** ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள வெற்றிவேல் என்ற 1வது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3** ஆகும். எனது கையொப்பங்களை எதற்காக

போட்டுக்கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எந்த விபரமும் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

1. போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 31.12.2022 ம் தேதி காலை 6.00 மணிஎவில் நானும் குமார் என்பவரும் சுக்காம்பட்டி ரோட்டில் உள்ள பெருமாள் வெடிக்கடை அருகே சென்றபோது சிங்கம்புணரி காவல்நிலைய ஆய்வாளர் வழக்கு விபரங்களை கூறி வழக்கு சம்பயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் பின்பு அன்றைய தினம் காலை 7.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடத்திலிருந்து உடைந்த பிராந்தி பாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் அதற்காக நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது வேண்டுமென்றே அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:

சிங்கம்புணரி காவல்நிலையத்தில் வைத்து ஒன்றும் எழுதாத வெள்ளை பேப்பரில் என்னிடமும் என் அண்ணன் குமாரிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.09 16:12:07 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**